**புத்தளம் பிரதேச சபை**
**புத்தளம் மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 26 திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளரின் பொழிப்பு அறிக்கை 2020 ஜுன் 30 ஆம் திகதியும், விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 ஜுலை 24 ஆம் திகதியும் தவிசாளரிற்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பிரிவில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து நிதிக்கூற்றுகளின் 2019 திசெம்பர் 31 இல் புத்தளம் பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டிற்கான பில்லிடலாக கணக்கீடு செய்திருக்காத நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 50,440 பெற வேண்டியதாக கணக்குகளில் காட்டப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஜர்னல் குறிப்பு மூலம் கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுப்பதாக தயவுடன் அறிவிக்கிறேன். |
| (ii) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி களஞ்சியத்தில் காணப்பட்ட ரூபா 24,600 பெறுமதியான வீதி விளக்குகள் இருப்பொன்று கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஜர்னல் குறிப்பு மூலம் கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுப்பதாக தயவுடன் அறிவிக்கிறேன். |
| (iii) | பிரதேச சபைக்கு சொந்தமில்லாத காணிகளின் நிர்மாணம் மற்றும் திருத்த வேலைகளிற்காக கடந்த ஆண்டுகளில் சபை நிதியத்தினால் செலவிடப்பட்ட ரூபா 2,460,762 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | காணிகளின் சரியான உரிமையை உறுதி செய்து கொள்ள வேண்டும். | அக் காணிகளின் உரிமையை உறுதி செய்து கொள்ள எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக தயவுடன் அறிவிக்கிறேன். |
| (iv) | மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட மூலதன செலவு ரூபா 10,816,480 மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஜர்னல் குறிப்பு மூலம் கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுப்பதாக தயவுடன் அறிவிக்கிறேன். |

**(ஆ) பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்ககள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | 2019 திசெம்பர் 31 திகதியன்று பெற வேண்டிய 23 கணக்கு மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 96,117,145 ஆனதுடன் அவற்றில் 05 ஆண்டு காலத்தை விஞ்சிய மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 5,966,890 ஆகக் காணப்பட்டது. | பெற வேண்டிய தொகையை விரைவில் அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | பெற வேண்டிய மீதிகளை அறவிட தேவையான நடவடிக்கைகள் எடுப்படுவதாக அறிவிக்கிறேன். |
| (ii) | 2019 திசெம்பர் 31 திகதியன்று செலுத்த வேண்டிய 15 கணக்கு மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 44,908,760 ஆனதுடன், அவற்றில் 05 ஆண்டு காலத்தை விஞ்சிய மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 2,023,178 ஆகக் காணப்பட்டது. | செலுத்த வேண்டிய மீதிகளை விரைவில் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்வரும் ஆண்டில் கடன்கொடுனர் மீதியில் உள்ள பதிவழிக்கக் முடியுமான கடன்கொடுனர் மீதிகளை பதிவழிக்க நடவடிக்கை எடுப்பதாக தயவுடன் அறிவிக்கிறேன். |

**(இ) கணக்காய்விற்கு தேவையான எழுத்துமூல சான்றுகளின்மை**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | கூட்டுத் தொகை ரூபா 192,229,538 ஆன 05 கணக்கு விடயங்களிற்குரிய சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்படும் கணக்கு விடயங்களிற்குரிய சான்றுகள் சமர்ப்பிக்கபப்பட வேண்டும். | குறித்த பதிவேடுகள், மீதி உறுதிப்பாடுகள், கணிப்பீட்டு சபை அறிக்கை மற்றும் உறுதிகள் நாளாதுவரையாக பேண வேண்டுமெனவும், கணக்காய்விற்கு தேவையான ஆவணங்களை சமர்பிக்க ஆலோசனை வழங்க்பபட்டது. |
| (ii) | மீளாய்வாண்டு நவம்பர் மாதம் 08 திகதிய இலக்கம் 1302 கொண்ட ரூபா 25,250 ஆன வவுசர் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கொடுப்பனவு வவுசர் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கபப்பட வேண்டும். | குறித்த வவுசர்கள் கிடைத்தவுடன் கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதாக தயவுடன் அறிவிக்கிறேன். |

## 1.4 இணங்காமை

### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் உடனான தொடர்பு | இணங்காமை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டம் | | | |
| (i) 128 பிரிவு | பிரதேச சபையினால் பயன்படுத்தப்படும் 42 ஆதனங்களின் உரிமையை சுவீகரித்துக் கொண்டிருக்கவில்லை. | சட்ட விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடக்க வேண்டும். | அனைத்து காணிகள் உட்பட அனைத்து ஆதனங்களையும் எதிர்காலத்தில் சட்டபூர்வமாக சுவீகரிக்க நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ii) 129(2) (ஊ) பிரிவு | பிரதேச சபைக்கு பெற வேண்டிய ரூபா 3,061,208 பெறுமதியான குத்தகை வாடகை, கடையறை வாடகை முறையாக பெற்றுக் கொள்ள முயற்சி எடுத்திருக்கவில்லை | பெற வேண்டிய வருமானத்தை விரைவாக அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | இறுதி அறிவித்தல் விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் சட்ட நடவடிக்கை எடுத்தலை கூடிய விரைவில் ஆரம்பிப்பதாக அறிவிக்கிறேன். |
| (iii) 136 பிரிவு | நிலுவை வீதவரி மற்றும் ஏக்கர் வரி ரூபா 2,392,545 அறிவிடப்பட்டிருக்கவில்லை. | பெற வேண்டிய வருமானத்தை விரைவாக அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | வீதவரி மற்றும் ஏக்கர் வரியை பில்லிட்டு எதிர்வரும் ஆண்டிலிருந்து அறவிட நடவடிக்கை எடுக்கிறேன். |
| (iv)143 பிரிவு | சபை அதிகார எல்லையில அமைந்துள்ள ரூபா 110,968,234 ஆன காணி மற்றும் கட்டிடங்களை 05 வருடத்திற்கு ஒரு முறை மதிப்பிட்டு வரி அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை | புதிய மதிப்பீட்டின் படி வரி அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | உரிய மதிப்பீட்டை 2019 ஆண்டு பூர்த்தி செய்து குறித்த மதிப்பீட்டு அறிக்கை கிடைக்காததால் 2005 ஆண்டு மதிப்பீட்டின் மீது தொடர்ந்தும் வரி அறிவிடப்படுகிறது. வருமான பரிசோதகர் மூலம் தற்காலிக மதிப்பீடொன்றை மேற்கொண்டு குறித்த |

| | | | |
|---|---|---|---|
| | | | கட்டணம் அறவிட்டபடுகிறது. |
| (v) 158 பிரிவு | வீதவரி மற்றும் ஏக்கர் வரி நிலுவைப் பணம் அறவிட அவ்வரியை செலுத்த வேண்டியவர்களின் ஆதனத்தை தடை செய்து நிலுவையை அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சட்டத்தின் உரிய பிரிவின் படி வரி அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் ஆதனத்தை தடை செய்தேனும் குறித்த நிலுவை தொகையை தீர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கிறேன் |
| (vi) 159(i)பிரிவு | சபைக்கு சொந்தமான ஆதனங்களை வாடகைக்கு வழங்கியதில் அறவிட வேண்டிய ரூபா 3,061,208 வை அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பெற வேண்டிய வருமானத்தை விரைவாக அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | சபைக்கு சொந்தமான ஆதனங்களை வாடகைக்கு வழங்கியதில் அறவிட வேண்டிய பணத்தை அறவிட சட்ட நடவடிக்கை எடுக்க எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |
| **(ஆ) 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாகம்) விதிகள்** | | | |
| (i) இலக்கம் 194 விதி | பேணப்பட்டிருந்த பொருட் பதிவேட்டில் குறிப்புகள் நாளாதுவரையாக்கப் பட்டு இருக்கவில்லை. | விதி பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | பொருட் பதிவேட்டு நியமங்களிற்கு அமைய எதிர்காலத்தில் நாளாதுவரையாக்க நடவடிக்கை மேற்கொள்வதாக தயவுடன் அறிவிக்கிறேன். |
| (ii) இலக்கம் 203 விதி | சபையின் ஆதனங்கள் பற்றிய கணிப்பீட்டுச் சபை அறிக்கையொன்றை முன்வைக்கப்படவில் லை. | விதி பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் கணிப்பீடொன்றை மேற்கொண்டு அறிக்கையை கணக்காய்விற்கு சமர்பிப்பதாக தயவுடன் அறிவிக்கிறேன். |
| (iii) இலக்கம் 218 விதி | சபையின் அனைத்து காணி மற்றும் கட்டிடங்களை வருடத்திற்கு ஒரு முறையேனும் பரீட்சிக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை | விதி பிரகாரம் பரிசோதனை குழுவொன்று நியமிக்கப்பட்டு பரிசீலிக்க வேண்டும். | எதிர்காலத்தில் அதற்காக பரிசோதனை குழுவொன்றை நியமித்து தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக தயவாய் அறிவிக்கிறேன். |

| | | | |
|---|---|---|---|
| **(இ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை** | | | |
| (i) நி.பி.1645 (அ) | வாகன லொக் புத்தகங்களை நாளாதுவரையாக பேணியிருக்கவில்லை. | லொக் புத்தகங்களை நாளாதுவரை யாக பேண வேண்டும். | தற்போது நாளாதுவரையாக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக அறிவிக்கிறேன். |
| (ii)நி.பி.1647 (அ)(ஆ) | 03 வாகன திருத்த வேலைகளின் போது ரூபா 383,035 பெறுமதியான 12 உதிரிப்பாகங்களை மீண்டும் களஞ்சியத்திற்கு ஒப்படைத்திருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | உடனடியாக அவற்றை களஞ்சியத்திற்கு பெற்றுக் கொண்டு உரிய குறிப்பிட்டு கணக்காய்விற்கு சமர்பிப்பதாக தயவுடன் அறிவிக்கிறேன். |

**1.5 போதியளவு அதிகாரத்தால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டினுள் முறையான அங்கீகாரமின்றி பில்லிடப்பட்ட வருமானம் மற்றும் பெறவேண்டிய வருமானம் ரூபா 28,476,615 கடந்த ஆண்டுகளின் இலாபத்திலிருந்து பதிவழிக்கப்பட்டிருந்தது. | வருமானத்தை பதிவழிக்க முறையான அங்கீகாரம் பெற வேண்டும். | எதிர்காலத்தில் சரியான அங்கீகாரத்துடன் கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுப்பதாக தயவாய் அறிவிக்கிறேன். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2019 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 27,946,331 ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 33,247,648 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

பிரதேச சபையினால் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக முன்வைக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| வருமான மூலம் | 2019 மதிப்பிடப்பட்ட வருமானம் | பில் போடப்பட்ட வருமானம் | சேர்க்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | 2018 மதிப்பிடப்பட்ட வருமானம | பில் போடப்பட்ட வருமானம | சேர்க்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| வீத வரி மற்றும் வரி | 3,145 | 3,094 | 3,002 | 2,393 | 1,284 | 3,585 | 1,130 | 2,306 |
| வாடகை | 14,764 | 13,585 | 17,796 | 3,621 | 13,394 | 12,560 | 8,548 | 7,272 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 2,000 | 2,486 | 2,486 | - | 4,300 | 2,063 | 20,633 | - |
| ஏனைய வருமானம் | 79,734 | 41,943 | 71,079 | 73,992 | 83,645 | 81,700 | 69,641 | 59,933 |
| | 99,643 | 61,108 | 94,363 | 80,006 | 102,623 | 99,908 | 99,952 | 69,511 |

- சேர்க்கப்பட்ட வருமானத்தினுள் ஆண்டில் பில்லிடப்பட்ட வருமானத்திலிருந்து சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானத்திலிருந்து சேர்க்கப்பட்ட வருமானமும் உள்ளடங்கியுள்ளன.

### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் ரூபா 100 மில்லியன் வருமானம் சேகரிக்க மதிப்பீடு தயாரித்திருந்த போதும், முன்னைய ஆண்டுகளிற்குரிய நிலுவை பெறுவனவும் உள்ளடங்களாக ரூபா மில்லியன் 94 மாத்திரம் சேகரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் பில்லிடல் தொடர்பான சேகரிப்பு ரூபா மில்லியன் 61 ஆகக் காணப்பட்டது. கடந்த ஆண்டு ரூபா 70 மில்லியனான நிலுவை வருமானம் மீளாய்வாண்டளவில் ரூபா 80 மில்லியனாக காணப்பட்டது. | நிலுவை வருமானத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |

### 2.2.3 வீதவரி மற்றும் வரி

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியில் நிலுவை வீதவரி ரூபா 1,776,349 ஆனதுடன், அந் நிலுவையினுள் 05 ஆண்டுகளை விஞ்சிய ரூபா 936,061 ஆன நிலுவை மீதி காணப்பட்டது. சபை 2006 ஆண்டின் பின்னர் 2019 ஆண்டு வரை பிரதான மதிப்பீடொன்று செய்யப்படாததுடன் நிர்மாணம் பூர்த்தி செய்யப்படும் கட்டிடங்கள் தொடர்பாக வருமான பரிசோதகர்கள் மூலம் தற்காலிக மதிப்பீட்டை மேற்கொண்டு வீதவரி அறவிட வேண்டிய போதும் அவ்வாறு செய்திருக்கவில்லை. | நிலுவை வருமானத்தை விரையில் அறவிட முயற்சி எடுக்க வேண்டியதுடன் வீதவரி மதிப்பீட்டை கால ரீதியாக மேற்கொள்ள வேண்டும். | வீதவரிகளில் 2019.12.31 வரையான நிலுவையினுள் பெறுமளவு நிலுவை புகையிரத திணைக்கள ஆதனங்களிற்கு உரியதானதுடன் அவ் ஆதனங்களிற்கு உரியதாக ரூபா 433,292 தொகை காணப்பட்டது. எம்மால் அப் பணத்தை அறவிட தொடர்ந்தும் செயற்பட்டுக் கொண்டிருப்பதுடன் ஏனைய குத்தகை நிலுவையையும் எதிர்காலத்தில் விரைவில் அறவிட நடவடிக்கை எடுப்பதாக தயவுடன் அறிவிக்கிறேன். |

### 2.2.4 ஏக்கர் வரி

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியன்று காணி உரிமையாளர்களிடமிருந்து அறவிட வேண்டிய நிலுவை ஏக்கர் வரி ரூபா 616,196 ஆனதுடன் அந் நிலுவையில் ரூபா 359,916 தொகை 05 ஆண்டுகளை விஞ்சிய காலத்திற்குரியதாகும். 1987 இன் 15 இலக்க பிரதேச சபை சட்டத்தின் இலக்கம் 134(3) பிரிவின் பிரகாரம் அதிகார எல்லையில் 01 ஹெக்டயரிற்கு அதிகமான காணிகளிலிருந்து ஏக்கரி வரி அறவிட வேண்டியிருந்த போதும், சபை அவற்றை அறவிட ஆர்வம் காட்டியிருக்காததுடன் 05 வருடங்களிற்கு ஒரு முறை அதிகார பிரதேசத்தில் கணிப்பீடொன்றை மேற்கொண்டு ஏக்கர் வரி அறவிட வேண்டிய காணிகளை இனங்காண சபை முயற்சித்திருக்கவில்லை. | அறவிட வேண்டிய வருமானத்தை விரைவில் அறவிட முயற்சிக்க வேண்டியதுடன் குறித்த கணிப்பீடுகளை மேற்கொள்ள வேண்டும். | ஏக்கர் வரி பதிவேடுகளில் காணப்படும் பிழைகள் காரணமாக வருடாந்தம் அறவிட முடியுமான பணத்தின் அளவு மிகக் குறைந்த பெறுமானத்தை எடுப்பதனால் எதிர்காலத்தில் மேற்கொள்ள திட்டமிட்டுள்ள ஏக்கர் வரி கணிப்பீட்டின் பின்னர் குறித்த பிழைகளை திருத்தி சரியான பெறுமதியின் மீது பில்லிடலை மேற்கொள்ளவும் பிழைகளுடனான பில்லிடலை விடயப் பொறுப்பு அமைச்சரின் அங்கீகாரத்துடன் பதிவழித்து அகற்றவும் நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

### 2.2.5 வாடகை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியன்று நிலுவை கடைவாடகை ரூபா 3,061,208 ஆனது. அவற்றில் 05 வருடங்ளை விஞ்சிய கடைவாடகை ரூபா 30,525 மற்றும் 01 – 05 வருட காலத்திற்கான ரூபா 315,525 ஆனது. | நிலுவை வருமானத்தை அறவிட விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டும். | குறித்த கடைவாடகை நிலுவையை அறவிட சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஆதன உடமையை சுவீகரித்துக் கொண்டு வழக்கினூடாக மீதி நிலுவையை அறவிட நடவடிக்கை எடுப்பதாக தயவுடன் அறிவிக்கிறேன். |

### 2.2.6 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபை பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து 2019 திசெம்பர் 31 திகதி பதிவேட்டின் பிரகாரம் பெற வேண்டியதாக இருந்த நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 23,137,228 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 28,045,336 ஆனது. | அறவிட வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணத்தை உரிய முறையில் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுப்பதாக தயவுடன் அறிவிக்கிறேன். |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

பிரதேச சபை அதிகார சட்டத்தின் 03 பந்தியின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொதுப் பாதைகள் தொடர்பான விடயங்களை ஒழுங்குபடுத்தலும் கட்டுப்படுத்தலும், மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

**(அ) உப விதிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபை அதிகார சட்டத்தின் 126 ஆம் பிரிவின் கீழ் 52 பிரதான விடயங்களிற்காக உப விதிகள் விதிக்கப்பட்டிருந்தன. | உப விதிகளை விதிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | பிரதேச சபை அதிகார சட்டத்தின் 126 ஆம் பிரிவின் கீழ் பிரதான விடயங்களிற்காக புத்தளம் பிரதேச சபை 52 உப விதிகளை விதித்துள்ளதாக தயவுடன் அறவிக்கிறேன். |

**(ஆ) செயல் நடவடிக்கை திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| விதிக்கப்பட்டிருந்த உப விதிகளின் படி சபையினால் நிரைவேற்ற வேண்டியிருந்த நடவடிக்கைகளிற்காக வருடாந்த செயல் நடவடிக்கை திட்டம் ஒன்று (அபிவிருத்தித் திட்டம் எனும் பெயரில்) தயாரிக்கப்பட்டிருந்த போதும், அது 2014 பெப்ரவரி 17 திகதிய PED/RED/01/04/2014/01 இலக்க பொது நிதி சுற்றறிக்கையின் பந்தி 04 இற்கு இணங்கவில்லை. | சுற்றறிக்கை பிரகாரம் வருடாந்த செயல் நடவடிக்கை திட்டத்தை தயாரிக்க வேண்டும். | எதிர்காலத்தில் குறித்த சுற்றறிக்கை பிரகாரம் செயல் நடவடிக்கை திட்டமொன்றை தயாரிக்க நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

**(இ) ஒதுக்கீடு வழங்கப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தயாரிக்கப்பட்டிருந்த வருடாந்த திட்டத்தின் பிரகாரம் சபையினால் நிரைவேற்ற வேண்டியிருந்த 04 செயற்பாடுகளிற்கு வருடாந்த பாதீட்டிலிருந்து ஒதுக்கீடு | குறித்த நோக்கத்திற்காக ஒதுக்கீட்டை பெற்றுக் கொள்ள | எதிர்வரும் பாதீடுகளிலிருந்த குறித்த செயற்பாடுகளிற்காக |

| | | |
|---|---|---|
| வழங்கப்படாததனால் அவற்றை மேற்கொள்ள முடியாதிருந்தன. | நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஒதுக்கீட்டை வழங்க நடவடிக்கை எடுப்பதாக தயவாவுடன் அறிவிக்கிறேன். |

**(ஈ) நோக்கத்திற்கு மாற்றமான செயற்பாடுகள்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| வருடாந்த அபிவிருத்தி திட்ட நோக்கங்களிற்கு முரணாக செயற்படுத்திய 16 செயற்பாடுகள் காணப்பட்டன. | வருடாந்த அபிவிருத்தி திட்ட நோக்கங்களிற்கு முரணாக செயற்படக்கூடாது. | குறித்த விடயத்துடன் தொடர்பாக சில கைத்தொழில்களை மேற்கொண்டுள்ளதுடன், எதிர்காலத்தில் அவசர இடர் சந்தர்ப்பங்களை தவிர, பாதீட்டிற்கு மாற்றமாக செயற்படுவதில்லை என தயவுடன் அறிவிக்கிறேன். |

**(உ) எதிர்பார்த்த வெளியீட்டு மட்டத்தை அடைந்து கொள்ளாமை**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| அபிவிருத்தி திட்டத்தில் காட்டப்பட்டிருந்த 10 பல்வேறு செயற்பாடுகளை மேற்கொள்ள ரூபா 146,930 தொகை செலவிடப்பட்டிருந்த போதும், எதிர்பார்த்த வெளியீட்டு மட்டத்தை அடைந்து கொண்டிருக்கவில்லை. | செயற்பாடுகளை மேற்கொள்கையில் எதிர்பார்த்த வெளியீட்டு மட்டத்தை அடைந்து கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2019 ஆண்டு அபிவிருத்தி திட்டத்தில் காட்டப்பட்டுள்ள 10 செயற்பாடுகளை மேற்கொள்ள மதிப்பிட்டுள்ள மொத்த தொகையையும் செலவிட்டிருக்காத போதும் அவ் வேலைத்திட்டங்களை சபை அலுவலர்களை தொடர்புபடுத்திக் கொண்டு மேற்கொண்டுள்ளதால் சபை நிதியத்தினால் செலவு மேற்கொள்ளாததால் இப்பணம் மிகையாக காணப்படுவதாக தயவுடன் அறிவிக்கிறேன். |

**(ஊ) திண்மக் கழிவு முகாமைத்துவம்**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| சபைக்கு சொந்தமாக கழிவு வெளியேற்றும் இடமொன்று இருந்த போதும் குறித்த இடத்திற்காக சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றிருக்கவில்லை. தனந்தோறும் 04 டொன்கள் அளவு கழிவுகள் திரட்டப்படுவதுடன் 2012 ஆண்டு மத்திய சுற்றாடல் அதிகார சபையினால கிடைத்த ஒதுக்கீடு | ஒழுங்கு முறையான கழிவு முகாமைத்துவம் செயன்முறை ஒன்றிற்கு செல்ல வேண்டும். | புத்தளம் பிரதேச சபை அதிகார எல்லை 240 வர்க்க கிலோ மீட்டரான போதும் காணப்படும் மனிதவள மற்றும் பௌதீக வளங்கள் பிரகாரம் வீதவரி வலயத்தில் மாத்திரம் கழிவுகளை ஒன்றுதிரட்டும் வேலைகளை மேற்கொளவதுடன் |

| | | |
|---|---|---|
| மற்றும் சபை நிதியத்தை பயன்படுத்தி நிர்மாணிக்கப்பட்ட திண்மக் கழிவு மத்திய நிலையத்தின் வேலைகளை மீளாய்வாண்டு இறுதிவரையும் ஆரம்பித்திருக்கவில்லை. பிரதேச சபை குப்பை வரி அறவிட ரூபா 100,000 மதிப்பிட்டிருந்த போதும் அவ்வரியை விதித்திருக்கவில்லை. திண்மக் கழிவு முகாமைக்காக மீளாய்வாண்டில் சபை நிதியத்திலிருந்து ரூபா 11,783,645 செலவிடப்பட்டிருந்தது. | | எதிர்காலத்தில் வீதவரி வலயத்தை விருவுபடுத்துகையில் அவ் அதிகார பிரசேதத்தில் கழிவுகளை ஒன்று திரட்ட நடவடிக்கை எடுப்பதாக தயவுடன் அறிவிக்கிறேன். |

**(எ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

-------------------------------------------------------------

-

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி நோக்கம் தொடர்பாக 2030 நிதழிச்சி நிரல் பற்றி சபை அறிந்திருந்ததுடன் அந் நோக்கத்தினை அடைந்து கொள்ளும் சில ஆரம்ப படிமுளைகளை சபை ஆரம்பித்திருந்தது. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை நோக்கிச் செல்ல நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2015 – 2030 இடையிலான காலத்தினுள் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளும் பல ஆரம்ப படிமுறைகள் பக்கம் கவனம் செலுத்தி செயற்பட்டுள்ளதாக தயவுடன் அறிவிக்கிறேன். |

## 3.2 மனிதவள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையின் அங்கீகரிக்கப்பட்ட ஆளணி எண்ணிக்கை 104 ஆன போதும் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான ஆளணி எண்ணிக்கை 105 ஆக இருந்தது. ஆரம்ப நிலை 10 மிகை பதவிகளில் அங்கீகாரம் இல்லாத நூலக தொழிலாளி, அலுவலக தொழிலாளி ஆகிய 02 பதவிகள் காணப்பட்டன. | முறையாக வெற்றிடங்களை நிரப்பிக் கொள்ள மற்றும் மிகையை அங்கீகரித்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | குறித்த அங்கீகாரங்களிற்காக உள்ளூராட்சி ஆணையாளரின் அங்கீகாரத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதாக தயவுடன் அறிவிக்கிறேன். |
| (ஆ) | கடந்த வருடங்களில் சேவையை விட்டுச் சென்ற, வேலை தடைக்குட்பட்ட மற்றும் ஓய்வு பெற்ற 09 ஊழியர்களிடமிருந்து ரூபா 35,494 ஆன ஊழியர் கடன் மீதி அறிவிட வேண்டியதாக இருந்தது. | அறவிட வேண்டிய ஊழியர் கடன் மீதிகளை விரையில் அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | அலுவலர்களை அறிவூட்டி அறவிட்டு மற்றும் உரிய பிணையாளர்களிடமிருந்து அறவிட்டுள்ளதாகவும் தயவுடன் அறிவிக்கிறேன். |

### 3.3 செயற்பாட்டு செயற்திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | பிரதேச சபைக்கு சொந்தமான 70 கடையறைகளில் குத்தகை வழங்கப்பட்ட 09 கடையறைகளிற்காக உடன்படிக்கை செய்திருக்கவில்லை. 05 வருடங்களிற்கு ஒரு முறை குத்தகை வாடகை திருத்தப்பட வேண்டிய போதும், சபைக்கு சொந்தமான 46 கடையறைகளின் கடைசி மதிப்பீடு 2005 ஆம் ஆண்டு செய்யப்பட்டிருந்தது. மேலும் உடன்படிக்கை செய்யப்பட்ட மிகப் பழைய 19 கடையறைகள் காணப்பட்டன. மாதாந்த கடையறை வாடகை நிலுவையாக இருந்த 28 கடையறைகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுமதியான ஆவணங்கள் பாதுகாப்பாக வைக்கப்பட வேண்டியதுடன் உடன்படிக்கை செய்தல் விரைவில் செய்யப்பட வேண்டும். | இக் கடையறைகளின் பழைய உடன்படிக்கைகள் காணாமல் போயுள்ளதால் தொடர்புடைய தரப்பினருடன் உடன்படிக்கை செய்து கொள்ள வருமாறு பல தடவைகள் அறிவித்த போதும் குறித்த தரப்பினர் வராததால் உடன்படிக்கை செய்தல் தவறியுள்ளது. எதிர்காலத்தில் குறித்த உடன்படிக்கைகளை புதுப்பித்து கணக்காய்விற்கு சமர்பிக்கிறேன். |
| (ஆ) | சபை அதிகார எல்லையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள விளம்பரங்கள் தொடர்பாக கணிப்பீடு செய்து பட்டியல் தயாரிக்கப்பட்டிருக்காததுடன் அதற்காக திட்டவட்டமான வேலைத் திட்டமொன்று சபையிற்கு இருக்கவில்லை. கட்டண அறவீடு பற்றிய முறையான பதிவேடொன்று பேணப்பட்டு இருக்காததுடன் கட்டணம் அறவிடப்படாத விளம்பர பலகைகள் மற்றும் அறிவித்தல் காட்சிப்படுத்தக் கூடாத இடங்களை இனங்கண்டிருக்கவில்லை. | ஒழுங்கு முறைப்பட பதிவேடுகளை பேணி குறிப்பான முறைமை ஒன்றின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | கணக்காய்வினால் இக் குறைபாடுகளை சுட்டிக் காட்டியதன் பின் அக் கணிப்பீட்டை ஆரம்பித்துள்ளதாக தயவுடன் அறிவிக்கிறேன். தொடர்புடைய இடங்களை இனங்கண்டு அறிக்கையிடுமாறு உரிய பிரிவிற்கு ஆலோசனை வழங்கியுள்ளதாக தயவுடன் அறிவிக்கிறேன். கணக்காய்வினால் சுட்டிக் காட்டியதன் பிரகாரம் பதிவேடுகளை நாளாதுவரையாக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக தயவுடன் அறிவிக்கிறேன். |

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### 3.4.1 சொத்துக்கள் ஆவன்படுத்தப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்கு சொந்தமான கட்டிடங்களுடன் கூடிய காணிகளில் கட்டிடங்களை நிர்மாணிக்க செலவிட்ட செலவுகள் மாத்திரம் நிலையான | காணிகளின் பெறுமதிகள் மதிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட | எதிர்காலத்தில் இக் காணிகளை மதிப்பிட்டு கணக்கீடு செய்ய தேவவையான |

| | | |
|---|---|---|
| சொத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் காணிகளின் பெறுமதியை மதிப்பிட்டு கணக்கீடு செய்திருக்கவில்லை. | வேண்டும். | நடவடிக்கைகளை எடுப்பதாக தயவுடன் அறிவிக்கிறேன். |

**3.4.2 சுவீகரிக்கப்படாத சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபை அதிகார எல்லையில் சுவீகரிக்கப்படாத 142 ஆதனங்கள் காணப்படுவதுடன் வாராந்த சந்தைகள், நூலகம், முன்பள்ளி, பொது குழாய்க் கிணறுகள், சுடுகாடுகள் மற்றும் விளையாட்டு மைதானங்கள் என்பனவாகும். மீளாய்வாண்டு காலப் பகுதியினுள் குறித்த ஆதனங்களின் நிர்மாணங்கள் மற்றும் பராமரிப்பு வேலைகள் சபையினால் மேற்கொள்ளப்படுகின்றன. | உரிய சுவீகரிப்புகள் விரைவாக மேற்கொள்ளப்பட வேண்டும். | இவ் ஆதனங்களின் ஒரு பகுதியை சுவீகரிக்க தேவையான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளது. 17 அலகுகளை ஒப்படைப்பதாக உரிய அரச அலுவலகங்களினால் கடிதம் மூலம் எமக்கு அறிவிக்கப்பட்டுள்ளன. சுவீகரிக்கப்படவுள்ள 40 காணிகளை சுவீகரித்துக் கொள்ள புத்தளம் மற்றும் மூன்தளம பிரதேச செயலாளர்களிற்கு அனுப்பப்பட்டுள்ளன. |

**3.4.3 வருடாந்த பண்டக/இருப்பு கணிப்பீடு**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையின் வருடாந்த பண்டக கணிப்பீடு பிரதான அலுவலகம், நூலகம் மற்றும் திண்மக் கழிவு மத்தியநிலையம் என்பவற்றிற்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. | வருடாந்த பண்டக கணிப்பீட்டிற்கு அனைதது இடங்களையும் உள்ளடக்க வேண்டும். | எதிர்காலத்தில் உரிய கணிப்பீட்டு செயற்பாடுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பதாக தயவுடன் அறிவிக்கிறேன். |
| (ஆ) | கடந்த ஆண்டு பண்டக கணிப்பீடில் பரிந்துரைக்கப்பட்ட பண்டங்கள் பராதீனத்துடன் உரிய கணக்குகளிலிருந்து அகற்ற நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கணிப்பீட்டு சபை பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தி பதிவேடுகளை நாளாதுவரையாக்க வேண்டும். | 2018.12.31 திகதி பண்டக கணிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் பரிந்துரைக்கப்பட்ட பண்டங்களை ஏலத்திலிட்டு மற்றும் அழித்துமுள்ளதுடன் பதிவேடுகளிலிருந்து அகற்றியில்லாததுடன் உடனடியாக அப்பதிவேடுகளை நாளாதுவரையாக்கி |

| | | |
|---|---|---|
| | | கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதாக தயவுடன் அறிவிக்கிறேன். |

**3.5 பெறுகை**

**பெறுகைத் திட்டம்**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவை 4.2.1 பிரிவு பிரகாரம் தயாரிக்க வேண்டிய பெறுகைத் திட்டம் மீளாய்வாண்டைப் போன்று கடந்த ஆண்டுகளிற்கும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையை பின்பற்ற வேண்டும். | 2006 பெறுகைகள் வழிகாட்டிக் கோவை 4.2.1(ஆ) பிரிவு பிரகாரம் எதிர்காலத்தில் முறையான பெறுகை திட்டமொன்றை தயாரிக்க பொறுப்பேற்பதாக தயவுடன் அறிவிக்கிறேன். |

**4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்கு 21 மூலதன செலவின விடயங்களிற்காக வழங்கப்பட்ட ரூபா 13,700,000 ஆன ஒதுக்கீடு அவ்வாறே எஞ்சி அல்லது ஏனைய செலவின விடயங்களிற்கு மாற்றப்பட்டிருந்தது. | திட்டமிடப்பட்ட கருத்திடங்களை பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | பலவித காரணங்களினால் கருத்திட்டங்கள் திட்டமிட்டவாறே மேற்கொள்ள புத்தளம் பிரதேச சபைக்கு முடியாமலிருந்ததுடன் எதிர்வரும் ஆண்டுகளில் திட்டமிட்டவாறு நிதி ஒதுக்கீட்டினை பெற்றுக்கொண்டு திட்டமிடப்பட்ட கருத்திட்டங்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

## 4.2 உள்ளக கணக்காயவு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபையின் உள்ளக கணக்காய்வு அலுவலக ஊழியர் நிர்வாகத்திற்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. | நிறுவனத்தின் செயற்பாட்டு நடவடிக்கையை மேம்படுத்துவத்த மறறும் செயலாற்றலை உயர்த்த உள்ளக கணக்காய்வை பயன்படத்த வேண்டும். | அனைத்து நிதி செயற்பாடுகளும் உள்ளக கட்டுப்பாடு முறைமைகளுடாக பரிசோதனை செய்யப்படுவதுடன் எதிர்காலத்தில் காணப்படும் உள்ளக கட்டுப்பாட்டு முறைகளை மேம்படுத்த நடவடிக்கை எடுப்பதாக தயவாவுடன் அறிவிக்கிறேன். |